[29th January 1972

**திரு. எம். ஆறுமுகசாமி :** அன்-க்ளெய்ம்டாக ( ) இருந்த மாடுகள் சும்மா திருப்பி விடப்படுவதாக அறிகிறேன். அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கால்நடைகளில் கன்றுகளாக உள்ள வற்றை அவ்வாறு பிடித்தால் அவற்றை எஸ்.பி.சி.ஏ. மூலமாக பெரம்பூருக்குப் பக்கத்தில் ஒரு பாதிரியார் நடத்துகின்ற மடாலயத்திற்கு 200 கன்றுகள் வரையில் அவர் வளர்ப்பதற்கு ஒப்புக்கொண்டிருப்பதால், அனுப்பப்படுகின்றன. வயதான மாடுகளுக்குச் சரியான போக்கிடம் இன்னும் கிடைக்கவில்லை.

**திரு. கே. ராஜாராம் :** உரிமம் பெறாத 'ஸ்ட்ரே காட்டில்' என்பவற்றிற்கு அபராதம் கட்டுகிறார்களே, அவர்கள் அந்த மாடுகளுக்குச் சொந்தக்காரர்களாகத் தானே இருக்கவேண்டும். அப்படிப்பட்ட மாடுகளை ஊருக்கு அப்பால் ஐந்து மைலுக்கு அப்பால் ஏதேனும் பண்ணை வைத்து அங்கே கொண்டுபோய்ச் சேர்க்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** உரிமம் கோரப்படாத மாடுகள் என்று சொன்னேன். அதற்குச் சொந்தக்காரர்கள் இல்லாத என்றுதான் பொருள். அந்தப் பொருளில்தான் சொன்னேன். சொந்தக்காரர்கள் இருந்தாலும், அபராதம் குறைவாக இருப்பதால், 50 காசு ஒரு ரூபாயாக இருப்பதால் வெள்ளாடு, செம்மறி ஆடு, பன்றிகளுக்கு 50 காசும் மற்றவைகளுக்கு ஒரு ரூபாய் என்றும் இருப்பதால் அதைக்கட்டி மீட்டுக்கொண்டு போய் மறுபடியும் விட்டுவிடுகிறார்கள். சொந்தக்காரர்களுக்கு அக்கால்நடைகளைப் பராமரிக்கத் தகுந்த தொழுவமோ வேறிடமோ இல்லை. அதனால் வெளியே விட்டுவிடுகிறார்கள். ஒரு ரூபாய்தானே என்று செலுத்திவிடுகிறார்கள். முதலில் உரிமம் இல்லாத, சொந்தக்காரர்கள் இல்லாத கால்நடைகளைப் பிடித்து வெளியில் உள்ள பண்ணைக்கு அனுப்ப மாநகராட்சி மன்றம் யோசித்து வருகிறது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** உரிமம் கோரப்படாத கால்நடைகள் இப்போது அரசாங்கப் பொறுப்பில் எத்தனை இருக்கின்றன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எத்தனை தேவை என்று சொன்னால், கணக்குப் பார்க்கலாம்.

*Complaints pending in the office of the Director of School Education, Madras*

* 54 *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the details of the complaints pending in the Office of the Director of School Education, Madras referred to it by the complaints cell of the Secretariat; and

(*b*) the stage at which the matters stand at present ?

**பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் முடிவுபெறாமல் உள்ள புகார்கள்**

**திரு. எம். ஆறுமுகசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தலைமைச் செயலகப் புகார்ப் பிரிவு, பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பி, அவரது அலுவலகத்தில் முடிவுபெறாமல் உள்ள புகார்களின் விவரங்கள் யாவை ?

(இ) இவை தற்போது எந்த நிலையில் உள்ளன ?

29th January 1972]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) மேலவையின் முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** பள்ளிக் கல்வி இயக்குநருக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்டு அனுப்புகிற புகார்களுக்கு பதில் எழுத வேண்டுமென்ற விதிமுறை வைத்தால், பல பிரச்னைகள் தீருவதற்கு வழியாகும். இதை அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையிலும், அனுப்பப்படுகிற அத்தகைய கடிதங்களுக்கு உடனடியாக பதில் எழுத வேண்டுமென்ற குறிப்பு அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அவர்கள் குறிப்பிடும் விஷயம் என்ன நிலையில் இருக்கிறது, அது நடக்குமா நடக்காதா என்பதையும் காலத்தாழ்வு ஏற்படுமென்றால், உடனே சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்தால் அவர்கள் அதைப் புரிந்துகொள்வார்கள். அதைச் செய்ய வேண்டுமென்ற குறிப்பு இயக்குநருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. எம். ராஜா அய்யர் :** இங்கே குறிப்பிடப்பட்டுள்ள 31 முறையீடுகள், பென்ஷன் கொடுக்கவில்லை, சம்பளம் கொடுக்கவில்லை, காலதாமதமாகிறது என்று தான் இருக்கின்றன. இவையெல்லாம் முறையீட்டுக் கழகத்திற்கு வந்த புகார்களாகும். இதைத் தவிர கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு நூற்றுக் கணக்கான புகார்கள் வந்திருக்கக் கூடும். அவற்றைப் பற்றிய புள்ளி விவரம் தம்மிடம் இருக்கிறதா? குறிப்பாக ஓய்வூதியம், ஊதியம் சம்பந்தப்பட்ட புகார்கள் சம்பந்தமாக, குறிப்பிட்ட கால வரையறைக்குள்ளாக, இரண்டு மாதங்களுக்குள்ளாக, கல்வி இயக்குனர் முடிவெடுத்து அறிவிக்க வேண்டுமென்று அரசு ஆணையிடுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கல்வி இயக்குனர் அலுவலகத்திலும் புகார்கள் வருகின்றன. அவற்றின் மொத்த எண்ணிக்கை சொல்வதற்கில்லை. குறிப்பிட்ட குறிப்புகளைக் கேட்டதால், அவை தரப்பட்டிருக்கின்றன. ஓய்வூதியத்தைப் பொறுத்த வரையில், ஏற்கனவே இருந்த காலத்தாழ்வு ஓரளவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. எப்போது ஓய்வு பெறுகிறார்கள் என்பதை முன் கூட்டியே கண்டு ஐந்தாறு திங்களுக்கு முன்னால் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து ஓய்வு பெற்றவுடனேயே ஓய்வூதியம் வழங்கும் அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** முன்னால் உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, பள்ளிக் கல்வி இயக்குனருக்கு எழுதுகிற கடிதங்களுக்கு பதில் வருவதில்லை. பொதுவான விஷயத்தைப்பற்றி எழுதினாலும் பதில் வருவதில்லை. நானும் ஒரு இறந்த ஆசிரியருடைய மனைவிக்கு உதவித் தொகை தருவது சம்பந்தமாக மூன்றுமுறை கடிதம் எழுதி அதற்குப் பதில் எழுதப்படவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதுகிற கடிதங்களுக்காவது கட்டாயமாகப் பதில் அனுப்ப வேண்டுமென்ற ஏற்பாட்டை அரசு உடனடியாகச் செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** முதலில் குறிப்பிட்டபடி, சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்கள் எழுதுகிற கடிதங்களுக்கு அதில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயம் இருக்கிற நிலைமைக்கு உடனடியாகத் தகவல்

---

* Printed as Appendix III on pages 272–278

[29th January 1972

அனுப்ப வேண்டுமென்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கையைப் பிறகு தெரிவிக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தகவல் வராமலிருந்தால் அதை அரசு கவனித்து நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**திரு. எஸ். முத்துசாமி:** இந்த விவா அறிக்கையில், பல தகவல்கள் மாவட்டக் கல்வி அலுவலகத்திலிருந்து தலைமைக் கல்வி அலுவலகத்திற்கு வரவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருக்கிற எழுத்தர்கள் குறைந்து விட்டதால், இது போன்ற தாமதம் ஏற்படுகிறது என்பதை அரசு அறியுமா? அறிந்திருந்தால் கிளார்க்குகளை அதிகமாகப் போட்டு அந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முயற்சிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** காலதாழ்வுக்கான காரணங்கள் என்ன என்பது புரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போன்ற காரணமாக இருந்தால், அது தனியாகக் கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப் படவேண்டியதாகும். ஆனால் எல்லாவற்றிற்கும் அதுதான் காரணமாக இருக்குமென்று சொல்வதற்கில்லை. பொதுவாகவே இதில் ஏற்படும் நிலைமை மற்றவை பற்றி சுற்றறிக்கைகள் பள்ளிக் கல்வி இயக்குனருக்கும் கல்லூரிக் கல்வி இயக்குனருக்கும் விடப்பட்டிருக்கின்றன.

## *Temple Tanks*

*55 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Corporation of Madras has taken a number of temple tanks in Madras on lease; and

(*b*) if so, the details thereof?

### கோவில் குளங்கள்

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரிலுள்ள கோவில் குளங்கள் பலவற்றை சென்னை மாநகராட்சி குத்தகைக்கு எடுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மைலாப்பூர் ஆதிகேசவபெருமாள் கோயில் நம்பகர்களின் கோரிக்கையின்பேரிலும், பொது மக்களின் நலத்தை முன்னிட்டும், மைலாப்பூரில் உள்ள சித்திரக்குளத்தைச் சென்னை மாநகராட்சி ஆண்டுதோறும் பெயரளவு வாடகையாக ரூ. 1-க்கு 1953 முதல் 99 ஆண்டுக்கு குத்தகைக்கு எடுத்துள்ளது.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** தலைவர் அவர்களே, இந்தக் குளங்களை நிர்வகிப்பதற்கு அரசாங்கத்திடமிருந்து மாநகராட்சி மானியம் ஏதும் பெற்றுள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, சுகாதார நிலையம்போன்று தண்ணீரைத் தூய்மைப் படுத்துதல், பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளை மாநகராட்சி மன்றம் மேற்கொண்டிருக்கிறது. குளம் பழுதுபட்டிருப்பதால், சரிப்படுத்த வேண்டுமென்று ஒரு திட்டம் வகுத்து, ரூ. 66,500